# தமிழ் இலக்கியங்களில் சமயம்

**முனைவர் சி அருள் செல்வம்**

**எம்.ஏ., பி.எட்., எம். பில்., பி.எச்.டி., செட்.**

உதவிப் பேராசிரியர், **தமிழ்த்துறைத் தலைவர்(சுழற்சி 2)**

**ஸ்ரீ கன்யகா பரமேஸ்வரி மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,**

சென்னை 600 001. **shift2tamil99@gmail.com**

**46**

**ஆய்வுச் சுருக்கம்**

இலக்கியம் என்பது வாழ்க்கையை வழிமொழிந்து சொல்வது தான் இலக்கியம். வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி இலக்கியம் என்பர். தமிழ் இலக்கியங்கள் தனிமனிதனை சுத்திகரிக்கும் ஆக்கப்பணியை செய்து வருகிறது. இவ்வகையில் தமிழ் இலக்கியங்களை வாழ்வில் இலக்கியங்கள் என்றும் கூறலாம். மனிதனின் சமுத்திரம் உணர்ச்சிகளைச் சின்னச் சின்ன சிப்பிகளில் வைத்துக் காட்டுகிறது. இலக்கியங்களின் கருத்துக்குவியல்கள் வாழ்வை உயர்த்தும் வாழ்வியல் கருத்துக்களைக் கூறி அவனை வாழ்வாங்கு வாழச் செய்கிறது.

மனிதப் பண்புகளும் வாழ்வியல் அறங்களும் மதிப்பிழந்து கொண்டிருக்கும் வேகம் நிறைந்த வாழ்க்கைச் சூழல் இன்றைய சமூகத்தை பெரிதும் பாதித்துள்ளது. மனிதப் பண்புகளைத் திரும்பிப் பார்க்கக்கூட நேரமற்ற நிகழ்வுகளால் மட்டுமே நகர்ந்து கொண்டிருக்கிறது இன்றைய சமூகம் இதனை நெறிப்படுத்த மேம்பாடடையச் செய்ய தமிழ் இலக்கியங்களின் பங்கு இன்றியமையாததாகும். தமிழ் இலக்கியங்களில் காணப்படும் சமயச் சிந்தனைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.சமயம் விளக்கம் சமுதாய வாழ்வில் மனிதனோடு இணக்கமான உறவுடையதாக
சமயம் காணப்படுகிறது. மனித மனம் மகிழ்ச்சியையும் அமைதியையும் பெறும் வகையில் பண்படுத்தி மக்களை ஒன்றிணைப்பது சமயத்தின் முக்கிய பணியாகும்.

சமயம் என்பதற்கு "மதம்-மதத்தின் உட்பிரிவு" கரியாவின் தற்காலத் தமிழ் அகராதி:ப.542 எனப் பொருள் கூறுகிறது. சமையம் (சமயம்) என்னும் சொல் சமைப்பது என்னும் பொருளுடையது. மனிதனின் வாழ்க்கையை நல்வழிகளில் ஈடுபடச் செய்வது. பண்படுத்தி பக்குவமாக்கிச் சமைப்பது சமயம் எனகிறார் இன்னாசி.

சமயம் இருதயமற்றவர்கட்கு இருதயத்தையும் ஆத்மாவில் நம்பிக்கை இல்லாதவர்கட்கு ஆத்மாவையும் உணர்வில்லா உலகுக்கு உணர்வையும் கொடுக்கிறது.

Keywords

இயற்கை வழிபாடு, நடுகல் வழிபாடு, சைவம், வைணவம், சமணம், பௌத்தம் மதங்கள்

**தமிழ் இலக்கியங்களில் சமயம்**

முன்னுரை

உலகைக் கடந்து அண்ட சராசரத்தை உணரும் வழிமுறை கட்டமைப்பை சமயம் எனில்

மிகையன்று. சமயம் என்பது ஆன்மீக வளர்ச்சியின் பல்வேறு நிலைக்கும், வாழ்வின் பல்வகை சூழ்நிலைக்கும் ஏற்ப மனிதன் தன்னடத்தையே அமைத்துக் கொள்ள உதவியாய் அமைந்த ஒரு கருதுகோள் என்று கேபல் கூறுகிறார். சங்கத் தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களான தொல்காப்பியம், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை போன்ற நூல்கள் பண்டைய தமிழ் மக்களின் சமய வாழ்வைக் காட்டுகின்றன. இக்கட்டுரை சங்க இலக்கியங்களில் சமயம் பற்றி ஆராய்கிறது.

**நடுகல் வழிபாடு**

சங்க காலத் தமிழர்கள் மத்தியில் நடுகல் எழுப்பி வழிபடும் வழக்கம் நடைமுறையில் இருந்தது. அது சங்க காலத்துக்குப் பிறகும் நீண்டகாலமாக சுமார் 11 ஆம் நூற்றாண்டு வரை தொடர்ந்து இருந்துள்ளது. மனிதன் தனக்கு அச்சத்தையும் இன்ப, துன்பங்களையும் தரும் இயற்கையை முதலில் வழிபாடு செய்தான். அவன் சூரியனையும், இடி மழையையும், மரங்கள், விலங்குகள் மற்றும் பறவைகளையும், ஆறுகள், மலைகள், கடல்கள், விண்மீன்கள் என அனைத்தையும் வணக்கத்திற்கும் வழிபாட்டிற்கும் உரியதாக மாற்றிய செய்தி இலக்கியங்களில் காணக் கிடைக்கின்றது. தமிழர் பண்பாட்டில் இந்த நடுகல் வழிபாடு போர்த் தொழில் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது எனலாம்.

குறிப்பாக, தங்களை காத்தோர், தங்களுக்கு தொண்டாற்றியவர், தமது முன்னோர், போர்க்களத்தில் வீர மரணம் எய்தியோர், இயற்கை அல்லாத முறையில் மரணம் அடைந்த இளம் பெண்கள் எனப் பலருக்கும் நடு கற்களை ஏற்படுத்தி வழிபாடு செய்த செய்தியைக் காணுமிடத்து சங்க இலக்கியங்கள் நடுகல் வழிபாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதை காணமுடிகிறது. காரணம், சங்ககால சமூகம் போர் சமூகமாக, போரை கொண்டாடும் சமூகமாக இருந்ததையே நடுகல் வழிபாடுகள் காட்டுகின்றன. இந்த நடு கற்களை வணங்குதல் போரில் வெற்றிக்கு வழிவகுக்கும் என்ற நம்பிக்கை இருந்துள்ளது.

காதலுக்கும் வீரத்திற்கும் பெயர் பெற்ற சங்ககாலத்தில் நடுகல் வழிபாட்டினை குறித்து,

**'காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகள்'** தொல்.பொரு.60 **'பெயரும் பீடும் எழுதி அதர் தோறும் பீடி சூட்டிய**

**பிறகு நிலை நடுகல்'** அகம்.131

என்னும் வரிகள் வெளிப்படுத்துகின்றன. பத்துப்பாட்டில் ஒன்றான பெரும்பாணாற்றுப்படையில், பேய் என்பது 'அணங்கு' என்ற சொல்லால் குறிக்கப் பெற்று வழிபடப் பெற்றமை,

**'துணங்கையம் செல்விக்கு**

**அணங்கு நொடித்தாங்கு'**பெரும்பாண்.அடி.459

என்ற பாட்டில் காணப்படுகின்றது. பேயின் வழிபாடு இடம்

**'பிணம்தின் யாக்கைப் பேய்மகள் துவன்றவும்'**பட்.பாலை.260 என்ற பட்டினப்பாலை பாட்டில் உறுதிப்படுத்துகிறது. நடுகல் வழிபாட்டின் தாக்கம் இன்றும் தொடர்கிறது. கிராமப்புறத்து அல்லது நகர்ப்புறத்து தெய்வங்கள் என்று அழைக்கப்படும் தெய்வங்கள் சங்ககால நடுகல் வழிபாட்டின் எச்சங்களாகவே பார்க்கப்படுகிறது.

**சங்க இலக்கியத்தில் சைவம்**

பழந்தமிழர்கள் கடவுள் கொள்கை உடையவர்கள் என்பது சங்க இலக்கியத்தின் வழி அறியப்படும் செய்தியாகும். மண வாழ்க்கையில் ஈடுபட்டு மக்களைப் பெற்று இன்பவாழ்வு வாழும், தலைவனும் தலைவியும் கடவுளைப் பற்றி எண்ண முற்பட வேண்டும் என்று தொல்காப்பியம் கூறுகின்றது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நானிலத்திற்கும் உரிய தெய்வங்கள் இவையென்பதை,

**'மாயோன் மேய காடு உறை உலகமும்……**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**

**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'**தொல்.அகத்.5

என்ற தொல்காப்பிய நூற்பா தெற்றெனக் கூறுகின்றது.

சங்க நூல்களில் சைவ சமயக் கடவுளான சிவனைப் பற்றிய குறிப்புகள் விரிவாக வந்துள்ளன. ஆனால் சிவன் என்ற பெயர் அங்கே வழங்கப்படவில்லை. சிவனை அடையாளங் காட்டும் வகையில் தொடர்கள் மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளன.

எட்டுத்தொகை நூல்களுள் அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை ஆகிய ஐந்து நூல்களின் கடவுள் வாழ்த்துப் பாடல்கள் சிவனைப் பற்றியே அமைந்துள்ளன. புறநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்துப் போன்ற நூல்களில் சிவன் பற்றிய குறிப்புகள் கூறப்படுகின்றது.

புறநானூற்றில், அதியமானிடமிருந்து, உண்டவர்களை நீண்ட நாள் வாழ்விக்கும் அரிய நெல்லிக்கனியை பெற்ற ஔவை அவனை வாழ்த்தும்போது,

**பால்புரை பிறைநுதல் பொலிந்த சென்னி**

**நீலமணிமிடற் றொருவன் போல**

**மன்னுக பெரும நீயே…..'**புறம்.91

எனப் பால்போலும் பிறை நெற்றியில் பொருந்திப் பொலிந்த திருமுடியினையும், நீலமணி போலும் கரிய திருமிடற்றினையும் உடைய ஒருவனை(சிவன்)ப்போல நிலைபெறுவாயாக! என வாழ்த்துகிறார். இங்கு, சிவன் அணிந்திருக்கும் பிறையும் அவனுடைய நீலமணிமிடறும் குறிப்பிடப்படுகின்றன. முழுமுதற் கடவுள் என்று பொருள்படும் முதுமுதல்வன் என்ற தொடர்,

**'நன்றாய்ந்த நீணிமிர்சடை**

**முது முதல்வன்**'புறம்.166

என்ற மற்றொரு புறப்பாட்டில் இடம்பெறுகிறது.

கலித்தொகையில், அரக்கர்க்கு அரசனாகிய பத்துத் தலையை உடைய இராவணன், கயிலாய மலையை தன் கையினாலே எடுக்க முயன்ற நிலையை குறிப்பிடுகின்றது.

**'இமையவில் வாங்கிய ஈர்ஞ்சடை யந்தணன்**

**உமை யமர்ந் துயர்மலை இருந்தனனாக**

**ஐயிரு தலையின் அரக்கர் கோமான்**

**தொடிப்பொலி தடக்கையிற் கீழ்புகுத் தம்மலை**

**எடுக்கல் செல்லாது உழப்பவன் போல........**'கலித்.38

என்ற கலித்தொகை பாடலில், இராவணன் கயிலாய மலையைத் தூக்க முயன்று முடியாமற் போனது எண்ணி வருந்திய நிலையை பற்றிய குறிப்பும், இமய மலையினை வில்லாக வளைத்தவன் பற்றிய குறிப்பும், இறைவன், இறைவியோடு உயர்ந்த கயிலைமலையில் இருந்தனன் என்ற குறிப்பும் சிவனைப் பற்றிய குறிப்பாக இடம்பெற்றுள்ளன.

**'முக்கண்ணான் மூவெயிலும்**

**உடன்றக்கால் முகம்போல ஒண்கதிர் தெறுதலின்.......**'கலித்.2

என்ற வேறொரு கலித்தொகைப் பாடலிலும் சிவனைக் குறிக்கும் முக்கண்ணான் என்ற சொல் இடம் பெற்றுள்ளது. இதில் முக்கண்ணான் என்ற தொடர், தேவர்களுக்காக அவுணர்களை அடக்க முயன்று முப்புரங்களை எரித்த சிவனின் செயல்பாட்டை விரிவாகக் குறிக்கப்படுகிறது.

சங்க இலக்கியத்தின் பத்துப்பாட்டு தொகுதியில் இடம் பெறுகின்ற, காவிரிப்பூம்பட்டினத்தைச் சிறப்பிக்கும் பட்டினப்பாலை, தமிழகத்துப் பூக்களைப் பற்றிக் கூறும் குறிஞ்சிப்பாட்டு, நிலையாமையைக் கூறும் மதுரைக்காஞ்சி போன்ற நூல்களில் சிவனைப் பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன.

பாம்பு ஈன்று கொடுத்த ஒளிவிளங்கும் நீலநிறத்தை உடைய மணி உடையினை, ஆலின் கீழிருந்த அமரர் இறைவனுக்கு மனம் விரும்பி கொடுத்த குறிப்பினை,

**நீலநாகம் நல்கிய கலிங்கம்**

**ஆலமர் செல்வற் கமர்ந்தனன் கொடுத்த....ஆய்**'சிறுபாண்.96-97

என்ற பாடலிலும்,

**நீரு நிலனுந் தீயும் வளியு**

**மாக விசும்போ டைந்துடனியற்றிய**

**மழுவாள் நெடியோன் தலைவனாக**' மது.காஞ்.453-455

என்ற மதுரைக் காஞ்சி பாடலிலும் சிவனின் பல சிறப்புகள் கூறப்படுகின்றன.

**சங்க இலக்கியத்தில் வைணவம்**

திருமாலை முதற்கடவுளாக வணங்கும் வைணவத்தினைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியங்களிலும் உள்ளன. தமிழர்கள் கடல் சூழ்ந்த நிலப்பகுதியை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் நான்கு நிலங்களாகப் பகுத்தும், அந்நிலங்கட்குத் தெய்வங்களை வகுத்தும் காட்டியுள்ளனர். காடு சார்ந்த நிலமாகிய முல்லையையும், அதன் ஆதி தெய்வமான திருமாலையும் முதற்கண் வைத்துச் சிறப்பித்துள்ளமை,

**'மாயோன் மேய காடு உறை உலகமும்......**

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**

**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே'**தொல்.அகத்.5

என்ற பழந்தமிழ் இலக்கணமான தொல்காப்பியத்தால் அறியலாம். அவ்வாறே,

**மாயோன் மேய மன்பெறுஞ் சிறப்பிற்**

**றாவா விழுப்புகழ் பூவை நிலையும்'** தொல். புறத்.5

என்ற நூற்பா மாயோனுடைய காத்தற் தொழிலை விளக்குவதை அறியலாம். வார்த்துக்கொடுக்க, பேருருவங்கொண்டு காட்சி அளித்தவன் என,

**'வலம்புரி பொறித்த மா தாங்கு தடக் கை**

**நீர் செல, நிமிர்ந்த மாஅல், போல'**முல்.2,3

என்றும், கலித்தொகை அடியில் '**ஒருகுழை யொருவன்போல் இணர் சேர்ந்த மராமரமும்'**.கலி.27 என்றும் திருமாலைப் பற்றிய குறிப்புகள் உள்ளன.

**'வள்ளுரு நேமியான் வாய்வைத்த வளைபோலத்**

**தெள்ளிதின் விளங்கும் களிநெற்றிக் காரியும்'**கலி.9-10

என்ற அடிகளில் மாயோன் ஆழி தாங்கிய கையன் என்றும் அவன் வாய் வைத்து ஊதும் சங்குபோல் கரிய நெற்றியையுடைய ஏறு என்ற குறிப்பும் வருகின்றன. பரிபாடலில் திருமாலைப் போற்றிப் பாடல்கள் ஆறு உள்ளன. பிற சங்கப் பாடல்களிலும் திருமால், இராமன் பற்றிய குறிப்புகள் உள்ளன

இங்ஙனம், தமிழ் முன்னோர் கண்ட கருத்துகள், திருமாலைப் பற்றிய கருத்துகளாக மலர்ந்தது குறிப்பிடத்தக்கது.

**சங்க இலக்கியத்தில் சமணம்**

தமிழ் மொழியில், தொல்காப்பியம், புறநானூறு, நீலகேசி, சிலப்பதிகாரம், சூளாமணி, தேவாரம் போன்ற இலக்கண, இலக்கிய நூல்களில் சமணர்கள் பற்றிய செய்திகள் நேரிடையாகவும், மறைமுகமாகவும் கூறப்பட்டுள்ளன. பத்துப் பாட்டில் ஒன்றான மதுரைக்காஞ்சி, மதுரையில் சமணப் பள்ளிகள் இருந்ததை உறுதி செய்கிறது. மதுரையில் இருந்த அருகதேவன் கோயில் பற்றி இந்நூலில்

**வண்டு படப் பழுநிய தேன் ஆர் தோற்றத்துப்**

**பூவும் புகையும் சாவகர் பழிச்ச,**

**சென்ற காலமும், வரூஉம் அமயமும்,**

**இன்று இவண் தோன்றிய ஒழுக்கமொடு நன்கு உணர்ந்து,**

**வானமும் நிலனும் தாம் முழுது உணரும்,**

**சான்ற கொள்கை, சாயா யாக்கை,**

**ஆன்றுஅடங்கு அறிஞர்செறிந்தனர்,நோன்மார்'**மது,காஞ்.475-482 என்ற அடிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே மதுரைக் காஞ்சி காட்டும் காட்சியாகும். பட்டினப் பாலை என்பதும் பத்துப்பாட்டில் ஒன்றாகும். இந்நூல் காவிரிப்பூம்பட்டினத்தில் '**தவப்பள்ளி'**அடி.53 ஒன்று இருந்ததைக் குறிப்பிடுகிறது. இப்பள்ளி சமணர்களுக்கு உரியது என்றும், பௌத்தர்களுக்கு உரியது என்றும் இரு வேறு கருத்துகள் உள்ளன

**சங்க இலக்கியத்தில் பௌத்தம்**

கடைச்சங்க காலத்திற்குப் பின்னர்தான், அதாவது கி.பி.மூன்றாவது நூற்றாண்டுக்குப் பிறகுதான், பௌத்த மதம் தமிழ்நாட்டில் வந்திருக்கக்கூடும் என்று சிலர் கருதுகின்றனர். இதற்குக் காரணம், கடைச்சங்க நூல்களில் பௌத்தமதத்தைப் பற்றிக் கூறப்படவில்லை என்பதுதான். ஆனால், இவ்வாறு கருதுவது தவறானதாகின்றது. பௌத்த மதத்தைப்பற்றிய குறிப்புகள் கடைச்சங்கத் தொகை நூல்களில் காணப் படவில்லையாயினும், அச்சங்க காலத்து இலக்கியமாகக் காணப்படுகின்ற மதுரைக்காஞ்சி என்னும் நூலில் இந்த பௌத்த மதத்தைப்பற்றிக் கூறப்பட்டுள்ளது.

**'.........பேரிளம் பெண்டிர்**

**பூவினம் கையினர் தொழுவனர் பழிச்சிச்**

**சிறந்து புறங்காக்குங் கடவுட் பள்ளியும்'** மது.காஞ்.464-467

என அழகு விளங்கப் பெண்கள் பலரும் பூசைக்கு வேண்டிய மலர் முதலியவற்றோடு புத்தரை வழிபாடு செய்து, வாயால் புகழ்ந்து பாடுவதால் பௌத்தப்பள்ளி சிறந்து விளங்குகிறது எனக் கூறப்பட்டுள்ளது எண்ணிப் பார்க்கத்தக்கது. அன்றியும், மணிமேகலை என்னும் பௌத்த காவியத்தை இயற்றிய கூலவாணிகர் சாத்தனார் அருளிச்செய்த செய்யுள்கள் அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை என்னும் நூல்களுள் தொகுக்கப்பட்டுள்ளன.

கடைச்சங்க காலத்திலிருந்த புலவர்களுள் இளம்போதியார் என்பவரும் ஒருவர். இவரது பெயரே, இவர் பௌத்தர் என்பதைத் தெரிவிக்கின்றது. போதி என்பது அரசமரத்தைக் குறிக்கிறது. அரசமரம் பௌத்த சமயத்தில் புனிதமானதாகக் கருதப்படுகிறது. ஏனென்றால் **புத்தர் போதிமரத்தின் கீழ் அமர்ந்து பல ஆண்டுகள் தவம் செய்து ஞானம் பெற்றதால் பௌத்த சமயத்தவர் அரசமரத்தைப் புனிதமாகக் கருதிப் போற்றினர். அதனால் புத்தர் போதியார் என்று வழங்கப்பட்டார்** பௌத்தமும் தமிழும்,பக்19. அந்தப் பெயரைத் தாங்கியிருப்பதால் இளம்போதியார் பௌத்தராக இருக்கலாமென்று தோன்றுகிறது. இந்த இளம்போதியார் இபற்றிய செய்யுள் ஒன்று நற்றிணை என்னும் கடைச்சங்கத் தொகை நூலில் 72-ஆம் பாட்டாகத் தொகுக்கப் பட்டிருக்கின்றது, ஆகவே, கடைச் சங்க நூல்களில் பௌத்தப் புலவர்களின் செய்யுள்கள் இடம்பெற்றுள்ளது.

**முடிவுரை**

இவ்வாறெல்லாம், சங்க இலக்கியங்களில் சமயம் பற்றிய குறிப்பு வருகிறது. ஆனால் சிவன், திருமால், சமண, பௌத்த மதங்க என்ற பெயர் காணப்படவில்லை. சங்க நூல்களில் சைவ, வைணவ, சமண, வைணவ சமண பௌத்த மதங்களைப் பற்றிய அடையாளங்களுக்கான குறிப்புகள் காணப்படுகின்றன.

இவற்றிலிருந்து எல்லாவற்றையும் கடந்து நின்ற முழுமுதற் கடவுள் ஒருவனைப் பற்றிய கோட்பாட்டினை உடையவர்கள் சங்கத்தமிழர்கள் என்பதும் பெறப்படும். சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு ஆராய்கின்றபோது, சமணப் பௌத்த மதங்கள் தமிழர்க்கும் தமிழுக்கும் பெரும் பங்காற்றியுள்ளன என்பதை அறிய முடியும். தமிழர்களின் இறை நம்பிக்கை என்பது காலம்

தோறும் மாற்றங்களுக்கும், பிரிவுகளுக்கும் உள்ளாகி வந்துள்ளது. தமிழர்களின் தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் புதுப்புது மதங்கள் தோன்றி, அவை சைவ வைணவ மதங்களுக்குள் ஒடுங்கியோ அல்லது அதிகார வர்க்கத்தின் மதங்களின் முன் அடங்கியோ அளப்பரிய மாற்றங்களை ஏற்படுத்தின எனலாம். தமிழர் வரலாற்றில் பெருந்தொகை மரபாகக் கொண்டாடப்படும் சைவ, வைணவ மதங்களுக்குப் பிறகு தமிழில் சமண, பௌத்த மதங்கள் வேறொரு நிலை எனலாம். சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமும் பெருந்தெய்வ பெயர்களை பேசுகிறதே தவிர அதை மக்கள் வழிபாட்டில் முக்கிய பங்கு வகிப்பதாக குறிப்பிடவில்லை. மாறாக, சங்க இலக்கியங்களில் நடுகல் வழிபாட்டிற்கு அதிக முக்கியத்துவம் வெளிப்படுவதையும் காணப்படுகிறது.

**துணை செய்த நூல்கள்**

1. பௌத்தமும் தமிழும்,மயிலை சீனி.வேங்கடசாமி,திருநெல்வேலித் தென்னிந்திய சைஷித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சிமிடெட், திருநெல்வேலி,சென்னை- 1. 1950

2. தொல்காப்பியம்

3. கலித்தொகை

4. பட்டினப்பாலை

5. பெரும்பாணாற்றுப்படை

6. மதுரைக் காஞ்சி

7. சிறுபாணாற்றுப்படை

8.புறநானூறு

9.முல்லைப்பாட்டு

10.அகபுறநானூறு